1971 ஜூலை 22]

அவர்கள் போன்றவர்களுடைய உதவியைக் கொண்டு வட மாநிலங்களில் போய் வேலை பார்ப்பதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

பேரூராட்சிகளின் தரஉயர்வு

* 367 **வினா—திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு, வந்தவாசி, போளூர் போன்ற பேரூராட்சிகளை முனிசிபாலிட்டியாக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றத்தின் சம்மதம் பெறப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நகர மன்றங்கள் அமைப்பதற்கான அடிப்படைகள் அல்லது தகுதிகள் என்ன என்று அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிறதா? அப்படியானால் அதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியில் 20 ஆயிரம் மக்கள் இருந்து வருமானம் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்குமானால் அதனை நகரமாக மாற்றலாம். அந்தப் பேரூராட்சியினுடைய வருமானம் 1 லட்ச ரூபாய்க்கு மேல் இருந்து அங்கேயிருக்கின்ற மக்களுடைய தொகை 20 ஆயிரத்திற்குக் குறைவாக இருக்குமானால் பேரூராட்சி அதை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி அனுப்புமானால், அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். எந்தவிதத்திலும் இந்த மூன்று ஊர்களும் அடங்காத காரணத்தினாலே அவை நகராட்சிகளாக மாற்றப்படவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக ஆக்கப்படுவதற்கான எல்லாத் தகுதிகள் இருந்தும் —அவை நகராட்சிகளாக மாறினால் வரி அதிகமாகப் போடப்படும் என்ற காரணத்தினால்—அந்த ஊராட்சி மன்றம் அதற்குரிய சம்மதத்தைத் தெரிவிக்கவில்லையென்றாலும் சட்டப்படி தகுதி யுடையவையாக இருக்குமானால் அவற்றை நகராட்சிகளாக மாற்ற அரசே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரளவுக்கு அந்தந்த நகர மக்களுடைய விருப்பத்தை அறிந்து தான் நாம் செய்யலாம். பேரூராட்சி தீர்மானம் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, ஊர் வளர்ச்சி இயக்குநருக்கு

அனுப்பிவைத்தால்தான் அந்தத் தகுதிகளின் அடிப்படையிலே நகராட்சிகளாக மாற்றமுடியும். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தைப்போன்ற ஒரு அச்சம் இருக்கிறதென்றால் தேவையில்லாத வகையிலே அதை நகராட்சியாக மாற்றித்தான் தீரவேண்டும். நீங்கள் அதிக வரிகட்டித்தான் தீரவேண்டுமென்று யார் மீதும் திணிக்க இயலாது. அவர்களாக விரும்புவார்களானால் தீர்மானம் போட்டுக் கேட்டுக்கொண்டால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். இந்த மூன்று பேரூராட்சிகளும் அடிப்படை தகுதிகள் இல்லாதவை என்பதால்தான் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்திலே நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சிகளாக ஆக்கப்படும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாநிலம் முழுவதும் பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆகவேண்டுமென்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்துவருகிறது. அதைப் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசி நகராட்சியாக மாற்றப்படுவதற்கான தகுதியையும் பண வசதியையும் பெற்றிருப்பதாகத் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா? ஆம் எனில், அதை முனிசிபாலிட்டியாக ஆக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: செய்யாறு, வந்தவாசி, போளூர் பேரூராட்சிகளிடமிருந்து இயக்குநருக்கு கோரிக்கைகள் வரவில்லை, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கைகள் வரவில்லை. சட்டப்படி அவைகள் நகராட்சியாகும் தகுதிகள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் பஞ்சாயத்து டவுன் பஞ்சாயத்தாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. எனவே, இந்தத் துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திருப்பூரை தேர்வுநிலை நகராட்சியாக்கல்

* 368 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரமன்றத்தை 'தேர்வு நிலை நகராட்சியாக' மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?